திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பம்பாய் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் உதவியுடன் 643 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாழை உற்பத்தி

* 146 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வாழை (Banana) உற்பத்தியைப் பெருக்கு வதற்குப் புதிய திட்டங்கள் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : குட்டை பச்சை வாழை வகைகளை முனைந்து பயிரிட வகை செய்வதற்காக, வாழை பயிரிடுமுனைப்புத் திட்டம் ஒன்று வட ஆற்காடு, திருச்சிராப் பள்ளி, மதுரை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடியிலும், அதைச் சுற்றிலும் பொதுவாக வாழை பயிரிடுவதற்கான முனைப்புத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பொதுவாக வாழை போன்ற பயிர்கள் புயல், காற்று போன்ற சேதங்களினுல் பாதிக்கப்படுகின்றன. குட்டை வாழை இனங்களை அதிகரிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் முயற்சியை வரவேற்கிறேன். அதோடு, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கிறதா ? குட்டை இன வாழை யைப் பயிரிட அரசு ஏதாவது மான்யம் அல்லது கடன் வழங்கும் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, குறைந்த தண்ணீரைக்கொண்டு வாழையைப் பயிரிடும் திட்டம் குறித்த விவரக் குறிப்பு ஒன்றும் தற்போது இல்லை. வாழை பயிரிடும் குடியானவர்களுக்குப் பண்ணைத் திட்டம் வகுக்கப்பட்டு, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் அவசியமான கடன் வசதிகள் செய்துதரப்படுகின்றன. தற்போது தலைக்கு 2 ஆயிரம் ரூபாய் என்ற மேல் வரம்புக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை சொந்தப் பொறுப்பின்மேல் கடன் வழங்கப்படுகிறது. இதில் ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் முதல் 500 வரை ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறது. எஞ்சிய தொகை உரம், எருக்கலவை, பயிர் நோய் மருந்துகள் வடிவில் வழங்கப்படுகின்றன.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி குட்டை வாழைகள், பச்சை வாழைகள் நம் நாட்டில் ஏராளமாகப் புதிது புதிதாக உண்டாகின்றன. நெற் பயிர் களுக்குப் பெயர் வைப்பதுபோல இந்தப் புதிய வாழைகளுக்கும் பெயர் வைக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? வல்லம்படுகை பக்கத்தில் பச்சை வாழைகள் அதிகம் இருப்பதினுல் அங்கே அதிக உதவி அளிக்க இந்த அரசாங்கம் முன்வருமா ? எத்தனைவிதமான வாழைகள் நம் நாட்டில் இருக்கின்றன ?

1970 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : எத்தனை விதமான வாழைகள் இருக்கின்றன என்பதற்கு அவற்றின் பெயர்ப் பட்டியல் இல்லை. புதியதாக ஒரு பயிர் கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றுக்குப் பெயர் வைக்கப்படும். அதைத் தவருக இந்த அரசாங்கம் நினைக்கவில்லை. மேலும் மத்திய அரசாங்கம் தான் இது போல விதைகளுக்குப் பெயர் வைத்து முன்னேடியாக இருந்திருக்கிறது. அதன் காரணத்தினுல் எல்லோராலும் பெருமையாக ஏற்று கொள்ளப்படுகிற பெயர்களே வைக்கப்படுகின்றன. வட ஆற்காடு, செங்கல்பட்டு, கோயமுத்தூர் போன்ற மாவட்டங்களில் பச்சை வாழை பயிரிடப்பட்டு வருகிறது. போதிய உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

மாணவியர் விடுதிகள்.

* 147 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள "அரசு மாணவியர் விடுதிக்குப் புது கட்டடம்" கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் தற்போது இருக்கிற மாணவியர் விடுதிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வீதம் வருடம் சுமார் 5 ஆயிரம் ரூபாய் வாடகை செலவாகிறது. அதற்கு சொந்தமான இடம் அங்கே இருக்கிற காரணத்தினுல் விடுதிக்கே சொந்தமான கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விடுதிகளுக்கு சொந்தமான கட்டடம் கட்டும் திட்டம் ஃபேஸ்டு ப்ரொக்கிராமாக நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கான செயற்குறிப்புகளை மாவட்ட நல அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அவ்வப்போது அனுப்பி வருகிருர்கள். திருப்பூர் நகர விடுதி சம்பந்தமாக செயற்குறிப்பு எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த ஆண்டு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அப்படிப்பட்ட செயற்குறிப்பு வந்தால் நிச்சயமாக அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

* 148 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு ஜில்லா, காட்டுமன்னுர்கோயில் அரசாங்க அரிசன பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானதா ?

மாண்புமிகு (டாக்டர்) திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : அரசாங்கம் ஓரிடத்தை எடுத்துக்கொள்ள உரிமை உண்டு. எடுத்துக்கொண்ட ஒரு இடத்தைத் திரும்பவும் மற்றொருவருக்கு ஜாரி செய்யவும் உரிமை உண்டு. ஆயினும், ஹரிஜனப் பெண்கள் ஹாஸ்டல் இருக்கும் இடத்தைத்